[2010 மே 6

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்ற கேள்விக்குச் சொன்ன பதிலிலேயே சொன்னேன்; பொதுவாக, தமிழ்நாட்டினுடைய அரிசி நுகர்வு 3,17,000 மெட்ரிக் டன்கள். மத்திய அரசாங்கம் மாதா மாதம் நமக்கு ஒதுக்குவது 2,96,453 மெட்ரிக் டன்கள். ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டம் தமிழகத்திலே தலைவர் கலைஞருடைய திருக்கரத்தாலே துவங்கப்பட்டதன் விளைவாக, அரிசியினுடைய நுகர்வு என்பது அதிகமாகியிருக்கிறது. அதனுடைய விளைவாக, சராசரியாக எடுத்துக்கொண்டால், மாதா மாதம் கிட்டத்தட்ட 25,000 டன்னிலிருந்து 27,000 டன் வரை நமக்குத் தேவை இருக்கின்றது. அந்தத் தேவை இருக்கிற காரணத்தால், இந்த ஆண்டைப் பொறுத்த அளவிற்கு சுமார் 2,37,000 டன் அரிசி மேலும் நமக்குத் தேவைப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போனபோது, காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய பெருந்தலைவியாக இருக்கிற நம்முடைய அன்னை சோனியா காந்தி அவர்களிடம் அதைப்பற்றி நேரடியாக முறையிட்டதன் விளைவாக, இம்மாதம் 3 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 4 ஆம் தேதி அதற்குரிய ஆணை நம்முடைய தமிழக அரசுக்கு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி சொன்னார்களா என்று கேட்டார்கள். எப்பொழுதும் தலைவர் கலைஞர் அவர்கள் எந்தக் காலத்திலும் நன்றி உள்ளவர். திருக்குறளுக்கு உரை எழுதியவர் அவர்; "நன்றியறிதல்" என்ற அதிகாரத்தையே எழுதியிருக்கிறார்கள். அதனால் எப்பொழுதும் இந்த அரசு மத்திய அரசிற்கு நன்றியுடையதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

146—

பல்கலைக்கழகம்

***84249—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 மே 6]

(அ) தமிழகத்தில் கோயில் சார்ந்த கலைகளை வளர்க்க பல்கலைக்கழகங்களை உருவாக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் கோயில் சார்ந்த கலைகளை வளர்க்க இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் பல்கலைக்கழகம் உருவாக்கும் திட்டம் ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பிரசித்தி பெற்ற இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயில், திருச்செந்தூர் முருகன் கோயில், கன்னியாகுமரி கன்னிகா பரமேஸ்வரி கோயில், வேலூர் வெட்டுவனை எல்லையம்மன் கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில், சென்னையில் திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோயில், பார்த்தசாரதி கோயில், கபாலீஸ்வரர் கோயில், வடபழனி முருகன் கோயில் போன்ற கோயில்களும், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், காஞ்சி காமாட்சியம்மன் கோயில் மற்றும் ஏனைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஊரிலுள்ள கோயில்களின் பெயர்களையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) கேள்விக்கு வாருங்கள்.

திரு. ம. குணசேகரன்: பிரசித்தி பெற்ற கோயில்கள் தமிழகத்தில் அதிக அளவில் இருந்தாலும், அந்தக் கோயில்களினுடைய வரலாற்றுச் சிறப்புகளை நாம் அறிவதற்கு வழிவகை இல்லை. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு. ஒவ்வொரு கோயிலினுடைய வரலாற்றை சேகரித்து வருங்கால சந்ததியினரும், இக்கால சந்ததியினரும் அறிந்துகொள்வதற்காக ஒரு பல்கலைக்கழகத்தை அமைத்து பாடங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2010 மே 6

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு திருக்கோயில்களுடைய பெயர்களை இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தத் திருக்கோயில்கள் தோன்றிய வரலாறுகளெல்லாம் தல வரலாறுகளாக, அந்தந்தத் திருக்கோயில்களில் நூல்களாக அச்சடிக்கப்பட்டு, அங்கு இருக்கக்கூடிய புத்தக நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கோயில்களுக்குச் செல்கின்ற நேரங்களில் மேற்படி புத்தகங்களைக் கேட்டுப் பெறலாம் என்பதையும், தொடர்ந்து எதிர்கால சந்ததியினருக்கும் இந்தக் கலைகளைப் பற்றித் தெரிகின்ற வகையிலே வளர்க்கவேண்டும் என்றும், அதைப் பல்கலைக்கழகம் மூலமாக போதிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் எண்ணுகின்றார்கள்.

அந்த எண்ணத்திற்கு ஏற்பதான், இன்றைக்குக் கல்வித் துறையில் பெரும் புரட்சியைச் செய்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு, தற்போது பல்வேறு பல்கலைக்கழகங்களை கலை சார்ந்த பல்கலைக்கழகங்களாகவும், தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களாகவும் அமைத்து, எல்லாவற்றுக்கும் மேலாக மத்தியப் பல்கலைக்கழகம் ஒன்றும் திருவாரூரில் இப்பொழுது துவக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்குக்கூட இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ஏறத்தாழ 286 ஏக்கர் நிலம் வழங்கி உதவி செய்யப்பட்டிருக்கிறது.

மேலும், கலையை வளர்ப்பதற்காக, கலை சார்ந்த பல்கலைக்கழகங்களில், திருக்கோயில் சார்ந்த கலைகளான சிற்பம், இசை, வேத ஆகமங்கள் ஆகியவை தொடர்பான பட்டப் படிப்புகளுக்குத் தனியான துறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், திருக்கோயில் சிற்பம் மற்றும் கட்டுமானக் கலை தொடர்பான சிற்பக் கலைகளைக் கற்பிக்க மகாபலிபுரத்தில்

2010 மே 6]

அரசினர் சிற்பக் கல்லூரியும், ஓவியங்களுக்காக சென்னை எழும்பூரில் அரசு கவின் கலைக் கல்லூரியும் இயங்கி வருகின்றன. இது தவிர, நாதஸ்வரம் போன்ற இசைப் பயிற்சிக்காக சென்னையில் தனியே அரசு இசைக் கல்லூரியும், மாவட்டங்களில் இசைப் பயிற்சிப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

மேலும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில், திருக்கோயில்களில் தமிழக சமய வரலாறு, வாழ்வியல் சடங்குகள், நால்வழி பாடும் சிறப்பு விழாக்கள், திருக்குட நன்னீராட்டு, இசைப் பயிற்சி ஆகியவற்றைத் தமிழில் பயிற்றுவித்து, தமிழ்வழி அர்ச்சனைகளை உருவாக்கிட ஓராண்டு பட்டயப் படிப்புகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த நிலையில் தனியாகப் பல்கலைக்கழகம் இதற்குத் தேவையில்லை எனத் துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில்தான் அதிகமான கோயில்கள் இருக்கின்றன. அதனையடுத்து இரண்டாவது இடமாக சிவகங்கை மாவட்டத்தில் அதிகமான கோயில்கள் இருக்கின்றன. அதற்குப் பிறகு மதுரை இன்றைக்கு சிறப்பு வாய்ந்த கோயில் நகரமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

அப்படிப்பட்ட சூழ்நிலையில், சிவகங்கை மாவட்டத்தில் அதிகமான கோயில்களுடைய வரலாறுகளும், கல்வெட்டுகளும் மறைக்கப்பட்டிருக்கின்றன. சில ஓலைச் சுவடிகளும் மறைக்கப்பட்டிருக்கின்றன. வரலாற்றுச் சுவடுகளையும், கல்வெட்டுகளையும் பாதுகாத்து, பாதுகாக்கப்பட்ட அந்த வரலாற்றுச் சுவடுகளையெல்லாம் ஒருங்கிணைத்து, அதையெல்லாம் வருங்கால சந்ததியினர் பயில்வதற்காக, இந்த ஆண்டிலே நீங்கள் அறிமுகப்படுத்த இருக்கின்ற சமச்சீர்க் கல்வியிலே ஒரு பாடத் திட்டமாக உருவாக்கி, மாவட்ட அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய சிவகங்கை மாவட்டத்திலே ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களில் இருக்கக்கூடிய கல்வெட்டுகளின் படிகள் எடுக்கப்பட்டு, தொல்பொருள் ஆய்வுத் துறையின் மூலமாகப் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. இந்து சமய அறநிலையத் துறையும் அதைப் பேணுவதில் முழுக் கவனம் செலுத்தி அக்கறையோடு செயல்பட்டு வருகிறது. மைய அரசும் அதற்குத் தேவையான உதவிகளைச் செய்து, அதற்கான முயற்சி நடைபெற்று வருகிறது. ஆகவே, இதற்கெல்லாம் தனியாகப் பல்கலைக்கழகங்களை உருவாக்குவது என்பது இயலாத ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

147—

கல்வெட்டுகள்

***121584—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்வெட்டுகள் மற்றும் சமணப் படுக்கைகள் அமைந்துள்ள இடத்தில் 400 மீட்டர் வரை கல் குவாரிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை நீதிமன்றம் விலக்கியதால் கல்வெட்டுகளைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கல்வெட்டுகள் மற்றும் சமணப் படுக்கைகள் அமைந்துள்ள மலைப் பகுதிக்கு அருகில் 300 மீட்டர் வரையுள்ள பகுதிகள் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 31 ஊர்களில் 90 தமிழ் பிராமி கல்வெட்டுகள் இதுவரை கிடைத்துள்ளன. இந்தத் தமிழ் பிராமி